சார்பு நீதிமன்றம், ஓமலூர், சேலம் மாவட்டம்.

முன்னிலை.- திரு. ஞான பாலகிருஷ்ணன், பி.எஸ்.சி., பி.எல்.,
சார்பு நீதிபதி, ஓமலூர்.

**2024** ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் **04**-ஆம் நாள் புதன் கிழமை

**I.A. No.3/2022**
**in**
**O.S.No.340/2018**

**1.** தாண்டாயம்மாள் **(died)**
**2.** வெங்கடாசலம்
**3.** லட்சுமி
**4.** பாக்கியம் ...மனுதாரர்கள்/வாதிகள்

/எதிராக/

**1.** அருள்ராஜ்
**2.** செல்வம்
**3. K.**சுவேந்திரன் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த இடைநிலைமனுவானது இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்த போது, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு **G.** பிரபு **B.A., B.L.,** அவர்கள் முன்னிலையாகியும், **1** முதல் **3** எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **S.** சிவப்பிரகாசம் **M.A.,M.L.,** அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதுரைகள் கேட்டும், மனு சங்கதிகள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்ததுமான இந்த மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்

உத்தரவு

இம்மனுவானது அசல் வழக்கில் வாதிகள்/மனுதாரர்கள், பிரதிவாதிகள்/ எதிர்மனுதாரர்களுக்கு கடந்த **14.11.2007**ம் தேதி தாரமங்கலம் சார் பதிவாளர் அலுவலகத்தில் கடனுக்கு ஆதரவாக எழுதிக் கொடுத்த கிரய ஆவண எண் **3789/2007**

GNANABALAKRISHNAN Digitally signed by GNANABALAKRISHNAN Date: 2024.12.04 17:37:01 +0530

என்ற ஆவணத்தில் உள்ள பிரதிவாதிகள்/எதிர்மனுதாரர்களின் கையெழுத்து மற்றும் கைரேகை ஆகியவற்றையும், மேற்படி பிரதிவாதிகள்/எதிர்மனுதாரர்கள் வாதிகள்/மனுதாரர்களுக்கு கடந்த **14.11.2007** ம் தேதியிலும், கடந்த **05.01.2009** ம் தேதியிலும் எழுதிக் கொடுத்த உறுதிமொழி பத்திரங்களிலுள்ள கையெழுத்து மற்றும் கைரேகை ஆகியவற்றையும் கைரேகை மற்றும் கையொப்பம் ஆகியவற்றை வல்லுநர் பரிசோதனைக்கு சென்னையிலுள்ள **Forensic Laboratory, Madras for handwriting expert and thumb impression (finger printing) opinion** க்கு அனுப்பி ஒப்புக் கொள்ளப்பட்ட கைரேகை மற்றும் கையொப்பத்துடன் ஒப்பீடு செய்து கைரேகை வல்லுனரின் அறிக்கை பெற நீதிமன்ற ஆணையரை நியமிக்க கோரி இந்தமனு மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2.** <u>மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்:</u>

மனுதாரர் இம்மனுவில் **3** ம் மனுதாரர் அசல் வழக்கில் **3** ம் வாதி ஆவார். **2, 4** மனுதாரர்கள் உடன் பிறந்த சகோதர, சகோதரிகள் ஆவார்கள். **2, 4** மனுதாரர்களுக்காக **3** ம் மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர்கள் பிரதிவாதிகளிடம் **14.09.2007** ம் தேதியில் ரு.**1,00,000/-** கடன் பெற்றுக் கொண்டதற்கு ஆதரவாக வாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தினை எதிர்மனுதாரர்கள் தாரமங்கலம் சார் பதிவு அலுவலகத்தில் ஆவண எண் **3789/2007** என்ற எண்ணில் எழுதி வாங்கி கொண்டார்கள். மேற்படி ஆவணம் கடனுக்கு ஆதரவாக எழுதிக் கொடுத்த ஆவணமாகும். மனுதாரர்கள் கிரயத்திற்கு மறுபயனாக எந்தவித தொகையும் பெற்றுக் கொள்ளவில்லை. மேற்படி கிரய ஆவணம் நடைமுறைப்படுத்தவில்லை. மனுதாரர்களிடம் கடனுக்கு ஆதரவாக கிரய ஆவணத்தை எழுதி வாங்கிக்கொண்ட எதிர்மனுதாரர்கள் வாதிகள் பெயருக்கு ஒரு உறுதி மொழி பத்திரத்தை கிரயம் செய்த தேதி அன்றே எழுதிக் கொடுத்துள்ளார்கள். மேற்படி இரு ஆவணங்களிலும் உள்ள எதிர்மனுதாரரின் கையொப்பங்கள் மற்றும் கைரேகைகள் ஒன்றே தான் ஆகும். மேற்படி உறுதிமொழிப் பத்திரத்தின் படி எதிர்மனுதாரர்கள் மனுதாரர்களுக்கு ரூ.**1,00,000/-** மட்டும் கொடுத்துள்ளார்கள். மேற்படி **14.11.2007** ம் தேதி எழுதிக் கொடுத்த உறுதிமொழிப்பத்திரத்தின் படி மீதி

GNANABALAKRISHNAN
Digitally signed by GNANABALAKRISHNAN
Date: 2024.12.04 17:37:10 +0530

கிரயத் தொகை எதுவும் கொடுக்கவில்லை. மேற்படி கிரய ஆவணம் கடனுக்காக தான் எழுதிக் கொடுக்கப்பட்டது.

இந்நிலையில் **1, 2** எதிர்மனுதாரர்கள் கடந்த **05.01.2009** ம் தேதி மீண்டும் ஒரு உறுதி மொழிப்பத்திரத்தை எழுதிக் கொடுத்து அதில் கையொப்பம் மற்றும் கைரேகை செய்துவிட்டு **14.11.2007** ம் தேதி எழுதிக் கொடுத்த அசல் உறுதி மொழிப்பத்திரத்தை பெற்றுக் கொண்டு விட்டார்கள். மேற்படி ஆவணம் **Ex.A2** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி இரண்டு உறுதி மொழிப் பத்திரப்படி ரூ.**1,00,000/-** தவிர வேறு எந்த தொகையும் எதிர்மனுதாரர்கள் மனுதாரர்களுக்கு தரவில்லை. ஆகையால் கடனுக்கு ஆதரவாக எதிர்மனுதாரர்கள் மனுதாரர்களிடம் **14.11.2007** ம் தேதி எழுதி வாங்கிக் கொண்ட கிரய ஆவணத்தில் உள்ள எதிர்மனுதாரர்களின் கையொப்பம் மற்றும் கைரேகையை **05.01.2009** ம் தேதியிட்ட கிரய பத்திரத்தில் உள்ள கையொப்பம் மற்றும் கைரேகையுடன் ஒப்பீடு செய்து அறிக்கை பெற நீதிமன்ற ஆணையரை நியமிக்க கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** **1** ம் <u>எதிர்மனுதாரர்/**1** ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு **2, 3** ம் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பதிலுரையின் சுருக்கம் பின்வருமாறு</u>:-

மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இந்த மனு சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. தள்ளுபடி ஆகக்கூடியது. மேற்படி மனுவில் இந்த எதிர்மனுதாரர்கள் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர மற்ற அனைத்து சங்கதிகளையும் நிரூபிக்க வேண்டியது மனுதாரர்களையே சாரும். மனுதாரர்கள் எதிர்மனுதாரர்களிடம் ரூ.**1,00,000/-** கடனாக பெற்று அதற்கு ஆதரவாக மனு சொத்தை கிரயம் செய்து மனு சொத்தின் சுவாதீனம் பிரதிவாதிகளிடம் ஒப்படைக்கவில்லை என்றும் கிரையப் பத்திரம் கடனுக்காக வேண்டி பிணையமாக கொடுக்கப்பட்டது என்றும் கூறியுள்ளது முற்றிலும் பொய்யானது ஆகும். இந்த எதிர்மனுதாரர்கள் **14.11.2007** அன்றோ, **05.01.2009** அன்றோ மனுதாரர்களுக்கு எவ்விதமான உறுதிமொழிப்பத்திரமும் எழுதி தரவில்லை.மேற்படி

GNANABALAKRISHNAN Digitally signed by GNANABALAKRISHNAN Date: 2024.12.04 17:37:23 +0530

உறுதிமொழி பத்திரம் சம்மந்தமான அனைத்து தகவல்களும் இந்த மனுவிற்காக கூறும் பொய்யான தகவல்கள் ஆகும்.மேற்படி கிரய ஆவணம் மற்றும் உறுதிமொழி பத்திரம் ஆகியவற்றில் உள்ள கைரேகை மற்றும் கையெழுத்தை பரிசோதனைக்கு அனுப்ப வேண்டியது அவசியமானது எனக் கூறியுள்ள சங்கதிகள் முற்றிலும் பொய். உண்மையில் மனுதாரர்கள் அவர்களுக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தை கடந்த **14.11.2007** ம் தேதி எதிர்மனுதாரர்களுக்கு ரூ.**70,000/-**க்கு விற்பனை செய்து அன்றைய தேதியிலேயே பதிவு செய்யப்பட்ட கிரய பத்திரத்தை ஏற்படுத்திக் கொடுத்து அன்றைய தினமே தாவா சொத்தின் சுவாதீனத்தை எதிர்மனுதாரர்களிடம் ஒப்படைத்து விட்டனர். கிரயம் செய்து **5** ஆண்டுகள் கழித்து போலியான ஆவணங்களை தயார் செய்து மனுதாரர்கள் மேட்டூர் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் **4/2012** என்ற வழக்கை தாக்கல் செய்யப்பட்டு பின்னிட்டு ஓமலூர் சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு அசல் வழக்கு எண் **340/2018** ஆக மறு எண் வழங்கப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது. தாவா நிலுவையில் இருந்தபோது **1** ம் வாதி இறந்து விட்டார். மேற்படி தாவாவில் **I.A. No.702/2019** என்ற மனுவானது கையெழுத்து கைரேகை நிபுணரின் கருத்துரை பெறவேண்டி தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனுவானது தள்ளுபடி செய்யப்பட்டது. மீண்டும் **I.A. No.1/2020** என்ற மனுவை அதே பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனுவானது **Not press** செய்யப்பட்டது. மேற்படி மனுதாரர்கள் தற்போது மீண்டும் அதே பரிகாரத்திற்காக இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர். மேலும் எதிர்மனுதாரர்கள் வசம் இல்லாத ஆவணத்தையும் எதிர்மனுதாரரின் ஏற்படுத்திக் கொடுக்காத ஆவணத்தையும் பரிசீலனைக்கு அனுப்ப வேண்டுமென்ற பரிகாரத்தை கோரி மேற்படி மனுவை தாக்கல் செய்தனர். மேற்படி மனுவிற்கு எவ்வித முகாந்திரமும் இல்லாத காரணத்தினால் மேற்படி மனுவானது சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் ஏற்கத்தக்கதல்ல. தள்ளுபடியாகக் கூடியது ஆகும்.

**4.** இந்த மனுவில் தீர்மானிக்கப்பட பிரச்சினை யாதெனில்,
இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

GNANABALAKRISHNAN Digitally signed by GNANABALAKRISHNAN Date: 2024.12.04 17:37:35 +0530

**5** <u>பிரச்சினை</u>

மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் மனுதாரர்கள் **14.09.2007** தேதியில் எதிர்மனுதாரர்களிடமிருந்து ரூ**.1,00,000/-** கடன் வாங்கினார்கள்**.** மேற்படி கடனுக்கு ஆதரவாகவே மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தினை தாரமங்கலம் சார் பதிவு அலுவலக ஆவண எண் **3789/2007** என்ற எண்ணில் எழுதி வாங்கி கொண்டார்கள்**,** மேற்படி ஆவணம் எழுதி வாங்கி கொண்ட எதிர்மனுதாரர்கள் மனுதாரர்கள் பெயருக்கு ஒரு உறுதி மொழி கிரய பத்திரம் **14.11.2007** தேதியில் எழுதி கொடுத்துள்ளார்கள்**.** மேற்படி உறுதி மொழி பத்திரத்தை திரும்ப பெற்றுக்கொண்டு **05.01.2009** தேதியில் ஒரு உறுதி மொழி பத்திரம் **1,2** எதிர்மனுதாரர்கள் எழுதிக் கொடுத்து கையொப்பம் மற்றும் கைரேகை செய்துள்ளார்கள்**. 3** ம் எதிர்மனுதாரரிடம் கையெழுத்தும் கைரேகையும் பெற்று கொடுப்பதாக உறுதி கூறினார்கள்**. 1** ம் பிரதிவாதியானவர் குறுக்கு விசாரணையில்**, 14.11.2007** தேதி மற்றும் **05.01.2009** தேதி ஆகிய தேதிகளில் கொடுக்கப்பட்ட உறுதிமொழி பத்திரத்தில் உள்ள கையெழுத்தை மறுத்துள்ளார்கள்**.** மேற்படி ஆவணம் வா**.**சா**.**ஆ **2** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது**.** மேற்படி ஆவணத்தை கையெழுத்து மற்றும் கைரேகை நிபுணருக்கு அனுப்பி அறிக்கை பெற்றால் தான் அசல் வழக்கில் மனுதாரர்கள்/வாதிகள் அவரது தரப்பினை நிரூபணம் செய்ய முடியும்**.** ஆகவே இம்மனுவை அனுமதிக்க வேண்டுமாய் வாதம் முன் வைத்தார்**.**

**6) 1** முதல் **3** எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தாக்கல் செய்துள்ள எதிருரையில் இம்மனு நிலைக்கத்தக்கதல்ல**.** உண்மையில்**,** மனுதாரர்கள் அவர்களுக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்துக்களை **14.11.2007** தேதியில் விற்பனை செய்து அன்றைய தினமே சுவாதீனமும் எதிர்மனுதாரர்களிடம் ஒப்படைத்து விட்டார்கள்**.** ஏற்கனவே மேட்டூர் சார்பு நீதிமன்றத்தில் அ**.**வ**.**எண் **4/2012** வழக்கு நடைபெற்று ஓமலூர் நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு அ**.**வ**.**எண் **340/2018** என்று மறு எண்ணிடப்பட்டு இவ்வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது**.** ஏற்கனவே மனுதாரர்கள் **I.A.No.702/2019** என்ற எண்ணில் தாக்கல் செய்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது மீண்டும்**, I.A.No.1/2020** என்ற மனுவை தாக்கல் செய்த பின்னிட்டு **not press** செய்து கொண்டார்கள்**.** தற்போது

GNANABALAKRISHNAN Digitally signed by GNANABALAKRISHNAN Date: 2024.12.04 17:37:47 +0530

மீண்டும், மேற்படி மனுக்களில் கூறியுள்ள அதே பரிகாரத்திற்காக இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள். **05.01.2009** தேதிய உறுதி மொழி பத்திரம் பொய்யாக மனுதாரர்களால் தயார் செய்யப்பட்டுள்ளது. ஆகவே இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என எதிருரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**7)** இந்நீதிமன்றம் மனு மற்றும் எதிருரை பரிசீலனை செய்யப்பட்டதில், மனுதாரர்கள் மனுவில் **14.11.2007** தேதி மற்றும் **05.01.2009** தேதி ஆகிய தேதிகளில் எழுதி கொடுக்கப்பட்டுள்ள உறுதி மொழி பத்திரத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல என **1** ம் பிரதிவாதி மறுத்துள்ளார். மேற்படி **05.01.2009** உறுதிமொழி பத்திரம் வா.சா.ஆ **2** ஆக இந்நீதிமன்றத்தில் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்களின் மனுவானது மனுதாரர்கள் பிரதிவாதிகளிடம் **14.09.2007** ம் தேதியில் ரு.**1,00,000/-** கடன் பெற்றுக் கொண்டதற்கு ஆதரவாக வாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தினை எதிர்மனுதாரர்கள் தாரமங்கலம் சார் பதிவு அலுவலகத்தில் ஆவண எண் **3789/2007** என்ற எண்ணில் எழுதி வாங்கி கொண்டார்கள். மேற்படி ஆவணம் கடனுக்கு ஆதரவாக எழுதிக் கொடுத்த ஆவணமாகும். தாவா சொத்தினை எதிர்மனுதாரர்களுக்கு **14.11.2007** தேதியில் கிரய ஆவணத்தின்படி அவர்கள் பெற்ற கடன் தொகைக்காக எழுதி கொடுக்கப்பட்டது அதற்கு **1, 2** எதிர்மனுதாரர்கள் ஒரு உறுதி மொழி ஆவணமும் எற்படுத்தி கொடுத்துள்ளார்கள். அந்த ஆவணத்தில் **14.11.2007** தேதி அட்வான்சாக எங்களிடம் பெற்றுக் கொண்டது ரொக்கம் ரூ**1,00,000/-** மீதி பாக்கி தொகை ரூ.**1,90,000/- 3** வருட வாய்தாவிற்குள் செலுத்தி விடுகிறோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**8)** மேற்படி **1** முதல் **3** எதிர்மனுதாரர்கள் தரப்பினர்களாக உறுதிமொழி ஆவணத்தில் காட்டப்பட்டுள்ளது. ஆனால் உறுதிமொழி பத்திரத்தில் **1, 2** லக்கமிட்டவர்கள் மட்டுமே **( 1, 2** எதிர்மனுதாரர்கள்**)** கையெழுத்து மற்றும் கைரேகை செய்துள்ளார்கள். மேற்படி அசல் வழக்கில் **1** ம் பிரதிவாதியினை குறுக்கு விசாரணை செய்யும் போது **14.11.2007** தேதி மற்றும் **05.01.2009** தேதி ஆகிய தேதிகளில் எழுதி கொடுக்கப்பட்ட உறுதிமொழி

GNANABALAKRISHNAN Digitally signed by GNANABALAKRISHNAN Date: 2024.12.04 17:37:59 +0530

பத்திரத்திலுள்ள கையொப்பம் **1**ம் எதிர்மனுதாரர் அவரது கையெழுத்து அல்ல என மறுத்ததால் தான் மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி வா.சா.ஆ.**2** ஆவணத்தில் உள்ள கையெழுத்து மற்றும் கைரேகையை தாரமங்கலம் சார் பதிவாளர் அலுவலகத்தில் **14.11.2007** ல் ஆவண எண் **3789/2007** ஆக பதிவு செய்த போது அங்குள்ள பதிவு புத்தகத்தில் **1, 2** எதிர்மனுதாரர்கள் செய்துள்ள கைரேகை மற்றும் கையெழுத்துகளை ஒப்பீடு செய்தால் உறுதிமொழி பத்திரமான வா.சாஆ **2** ல் உள்ள கையெழுத்து மற்றும் கைரேகை **1, 2** எதிர்மனுதாரர்களுடையதா, இல்லையா என தெரிந்து விடும் என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது. மேற்படி ஆவண எண் **3789/2007** பதிவு புத்தகமானது **15.10.2007** முதல் **19.11.2007** வரை உள்ளதாகும். மேற்படி அசல் பதிவு புத்தகமானது தாரமங்கலம் சார் பதிவாளர் அலுவலகத்தில் இருந்து இந்நீதிமன்றத்தில் **04.11.2024** தேதி அளிக்கப்பட்டுள்ளது. ஆகவே மேற்படி சார் பதிவாளர் அலுவலக புத்தக ஆவண எண் **3789/2007** ல் இம்மனு **1, 2** எதிர்மனுதாரர்களின் கையெழுத்து மற்றும் கைரேகையினை சர்ச்சைக்குரிய ஆவணமான **(disputed document)** வா.சா.ஆ **2** ஆவணத்தில் உள்ள **1, 2** எதிர்மனுதாரர்களின் கையெழுத்து மற்றும் கைரேகையுடன் ஒப்பீடு செய்தால் மேற்படி உறுதிமொழி பத்திரத்தில் கையெழுத்து மற்றும் கைரேகை **1, 2** எதிர்மனுதாரர்கள் அளித்துள்ளார்களா என்பது தெரியவரும். ஆகவே இம்மனுவை நீதியின் நலன் கருதி இம்மனு அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக,

இம்மனு அனுமதிக்கப்படுகிறது. திரு. ஆர். பாலு, வழக்கறிஞர் **(M/S 472/2011** செல்**: 9677893252)** சர்ச்சைக்குரிய **(disputed document)** வா.சா.ஆ **2** ஆவணமான **05.01.2009** தேதியிட்ட உறுதிமொழி பத்திரத்திலுள்ள கையெழுத்து மற்றும் கைரேகை பதிவை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கான ஆவணங்களை சென்னை, கையெழுத்து மற்றும் கைரேகை நிபுணர் ஆய்வகத்திற்கு எடுத்து செல்ல நீதிமன்ற ஆணையராக நியமிக்கப்படுகிறார். சர்ச்சைக்குரிய ஆவணமான **(disputed**

GNANABALAKRISHNAN Digitally signed by GNANABALAKRISHNAN Date: 2024.12.04 17:38:12 +0530

**document) 05.01.2009** தேதியிட்ட வா.சா.ஆ **2** உறுதிமொழி பத்திரத்தில் காணப்படும் கைரேகை மற்றும் கையொப்பம் பதிவை ஒப்பிட்டுப் பார்ப்பதற்காக ஆவணங்களை எடுத்துச் செல்லுமாறும், மேற்படி சர்ச்சைக்குரிய ஆவணத்தில் **(disputed document)** காணப்படும் கைரேகை மற்றும் கையொப்பம் அனுமதிக்கப்பட்ட ஆவணமான **(Admitted document)** தாரமங்கலம் சார் பதிவாளர் அலுவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள **3789/2007** ஆவணத்தின் பதிவு புத்தகத்தில் உள்ள **1** இலக்கமிட்ட அருள்ராஜ், **2** இலக்கமிட்ட செல்வம் ஆகியோர்களின் கையெழுத்தும் கைரேகையும் ஒன்றா என ஒப்பிடுவதற்காக **The Director, Forensic Science Laboratory, Mylapore, Chennai-4** ஆய்வகத்திற்கு எடுத்துச் செல்லுமாறும், மீண்டும் மேற்படி கையெழுத்து மற்றும் கைரேகை நிபுணரின் அறிக்கையை பெற்று வருமாறும் உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையர் ஊதியம் ரூ.**7500/-** ஆக நிர்ணயிக்கப்படுகிறது. மேற்படி தொகை மனுதாரர்களால் நேரடியாக நீதிமன்ற ஆணையருக்கு வழங்கப்பட வேண்டும். அழைக்க **21.01.2025.**

முடிவாக,

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு **2024**-ம் ஆண்டு டிசம்பர் மாதம் **4**-ம் நாளான இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

GNANABALAKRISHNAN Digitally signed by GNANABALAKRISHNAN Date: 2024.12.04 17:38:29 +0530

சார்பு நீதிபதி
ஓமலூர்

<u>பிற்சேர்க்கை:</u>
இரு தரப்பு சாட்சிகள்/சான்றாவணங்கள்: இல்லை.

GNANABALAKRISHNAN Digitally signed by GNANABALAKRISHNAN Date: 2024.12.04 17:38:38 +0530

சார்பு நீதிபதி
ஓமலூர்